

# பார்வையில் ஸ்டாலின்!

கோபால்ஜி, "மூன்று தலைமுறை பத்திரிகையாளர்களையும், அரசியல்வாதிகளையும் பார்த்த சோலை இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார். துணை முதல்வர் ஸ்டாலின் குறித்த அரிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. இது முதல் பாகமாக இருக்க வேண்டும். அடுத்த பாகம் ஆயிரம் பக்கத்திற்கு மேலும் இருக்கும் வகையில் வெளிவர வேண்டும்" என்றார்.

இவருக்குப் பின் பேசிய எழுத்தாளர் இந்துமதி, "இது சாதாரண நூல் அல்ல. ஏனென்றால் எழுதியவரும் சாதாரணமானவர் அல்ல. எழுதப்பட்டவர் பற்றியும் சாதாரணமாக எழுதிவிட முடியாது. மாவோ போன்ற உலகத் தலைவர்களின் சரித்திரத்திற்கு ஒப்பான நூல் இது" என்று பாராட்டினார்.

நெல்லை மனோன்மணியம் பல்கலைக்கழக துணைவேந்தர் சபாபதி மோகன், "மேடையைப் பார்க்கிறேன். பத்திரிகை துறையிலிருந்து அனைவரும் வந்திருக்கிறார்கள். இது ஒரு அதிசயமான நாள். கருப்பும் இருக்கிறது. சிவப்பும் இருக்கிறது. பல்வேறு கொள்கைகள் இருந்தாலும், பல்வேறு வண்ணங்கள் இருந்தாலும் எல்லோர்க்கும் ஒரே எண்ணம் என்ற அளவில் துணை முதல்வர் ஸ்டாலினை பாராட்ட பத்திரிகை உலகமே திரண்டு வந்துள்ளது" என்று கூறி, புத்தகத்தில் உள்ள 20 அத்தியாயச் சுருக்கங்களை சொல்லி, "இந்த மேடையில் நான் மட்டும் 'டை' கட்டி வந்துள்ளேன். கை கட்டி நின்ற சமுதாயத்தில் இருந்து வந்த என்னை 'டை' கட்ட வைத்த டாக்டர் கலைஞருக்கு நன்றி" என்று நிறைவு செய்தார்.

எக்ஸ்னோரா நிர்மல், "துணை முதல்வர் ஸ்டாலின் ஒரு அரசியல் ஞானி" என்று புகழாரம் சூட்டினார்.

கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் சொன்னது போல் 'வளையாத மீசை' நக்கீரன் கோபால், "ஸ்டாலின் பிறந்த நாள் விழா நேற்று நடைபெற்றது. அதனால் திருஷ்டி கழிப்பதற்காக பெரிய பெரிய பத்திரிகை அதிபர்கள், எழுத்தாளர்களை எல்லாம் கூப்பிட்டுவிட்டு இடையில் என் மாதிரி முரட்டு மீசைக்காரனையும் உட்கார வைத்திருக்கிறார்கள். அம்மா வந்திருக்காங்க (தயாளு அம்மாளைக் குறிப்பிட்டு). நான் எங்க அம்மாவைச் சொன்னேன். ஜெயலலிதான்னு நினைச்சுறப் போறீங்க... பொடா ஆட்சி மீண்டும் வந்துவிடக் கூடாது என்பதற்காக கலைஞர் தினமும் ரூம் போட்டு யோசித்து புதிய புதிய திட்டங்களை அறிவித்து வருகிறார்" என்றவர், கிராமங்களில் உள்ள 108 ஆம்புலன்ஸ் திட்டம் பற்றி விரிவாகப் பேசினார்.



"பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும்" என்று விகடன் குழுமத் தலைவர் பா.சீனிவாசன் பேசி, "தமிழ் தெரியாத மாணவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்" என்று கவலைப்பட்டார்.

'இந்து' என் ராம், "அராஜகத்தை ஸ்டாலின் (மிசா கொடுமை) கண்ணியத்துடன் சந்தித்தார். இந்த இயக்கம் (திராவிட இயக்கம்) பற்றி பத்திரிகைகள் (இந்து உட்பட) இருட்டடிப்புச் செய்தன. ஆனால் இந்த இயக்கம் தமிழகத்தின் சமூக, அரசியல் மட்டத்தில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய இயக்கம். அப்படிப்பட்ட இயக்கத்தில் வந்த ஸ்டாலினுக்கு அவர் தந்தை என்ன செய்தார்? அவர் இந்த நிலைமையை எட்டுவதை தாமதப்படுத்தினார் என்பதற்கு வேண்டுமென்றால் ஆதாரம் இருக்கிறது" என்றவர், "தி.மு.க.வில் பழைய மற்றும் புதிய தலைமுறைக்கு இடையேயான இணைப்புச் சங்கிலியாக ஸ்டாலின் திகழ்கிறார்" எனப் புகழ்ந்தார்.

திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி, "நான் இந்த மேடையைப் பார்த்து மீண்டும் மீண்டும் மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறேன். இவ்வளவு பேரும் திராவிட இயக்கத்தில் பூத்த இளஞ் சூரியனைப் பாராட்ட வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் திராவிட இயக்கத்தின் வெற்றி இதிலே உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். இவர்களை எல்லாம் இணைக்கின்ற மையப் புள்ளி தளபதி ஸ்டாலின்! காலம் தாழ்த்தியாவது இந்து ராம் போன்றவர்கள் பாராட்டிப் பேசியுள்ளனர். இது காலத்தின் கட்டாயம். சரித்திரத்தின் திருப்பு முனை" என்று பாராட்டினார்.

இறுதியில் பேசிய கமல்ஹாசன், "பாராட்டு விழா போன்ற நிகழ்ச்சிகளில் நிலைய வித்துவான் போல செயல்படுவதாக என்னைக் கூறுகின்றனர். ஒரு இயக்கத்தின் பெருமையைச் சொல்லக் கூடிய, சொல்ல வேண்டிய கடமை உள்ளது. இதைச் சொல்வதற்காக நிலைய வித்து வான் எனக் கூறினால் அதற்காகக் கவலைப்பட மாட்டேன்" என்று அரங்கத்தில் ஆணித்தரமாகப் பேசினார்.

படங்கள் : வேணு

